3

# Social work Intervention for strengthening preschool structure in thirunagar north

**Thavarasa Tharshan, Training Officer**

## Abstract

Thirunagr Surabi preschool is an educational institution that caters to families of diverse linguistic, religious, cultural and cultural backgrounds who have migrated from different areas. Although 32 children are studying in the Pre School, the village sits close to the urban area and the house near the roads are grand displaly. Therefore, there is a little involment in the activities of the non-goernment organization in the village. Surabi Pre School is found to be lacking in basic facilities and due to internal conflict in the community Level. There is no healthy environment to carry out happiness of learning and teaching activities for the children stdying there. In this situation, surabi preschool was selected by the social worker to strengthen the preschool structure in the community work. The representative of the concerned local community based organization were selected and task force was formed for community work and they were given adequate training and engaged in community work activities. Data collection was done quantitatively and qualitatively using primary and secondary data collection. Data were collected through non-probability purposive sampling through interview conducted with 11 government official and 2 focus group discussion conducted with community level organization representatives and subjected to statistical and thematical analysis. In social work activities Infrastutcture development, capacity development of teacher, renovation of children park etc. were identified as goal by social work team and facilitated by the social worker to carry out the social work intervention. Learning theory, ecological theory, poverty theory, motivation theory and social work principal, social work skills, social work approach were used to accomplish the goal. Through this, preschool children have the opportunity to engage in enjoyable healthy learning activities and to engage in pre school management with a strong pre school structure.

**Key words : Pre School, Social work Intervention and Empowerment**

**ஆய்வு சுருக்கம்**

திருநகர் சுரபி முன்பள்ளியானது நடுத்தர வருமானத்தையுடைய வெவ்வேறு பிரதேசங்களை சேர்ந்த மொழி பாங்கு, கலாசார, மத வேறுபாடுகளை உள்ளடக்கிய குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி பயிலும் நிறுவனமாகும். முன்பள்ளியில் 32 சிறார்கள் கல்வி பயில்கின்ற போதும் கிராமம் நகர்புறத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதனாலும் வீதிகளின் அருகிலிலுள்ள வீடுகள் பிரமாண்டமாக காட்சியளிப்பதனாலும் தன்னார்வ நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் குறித்த கிராமத்தில் இடம்பெறுவது குறைவாகவே உள்ளது. சுரபி முன்பள்ளியானது அடிப்படை வசதிகளற்றநிலையில் காணப்படுவதுடன் சமூகமட்ட அமைப்புக்களின் உள்ளக முரண்பாடுகள் காரணமா அங்கு கற்கும் சிறார்கள் கற்றல்ரீதியான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்நிலையில் சமூகப்பணியாளரினால் சுரபி முன்பள்ளியானது தெரிவு செய்யப்பட்டு முன்பள்ளிக்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான சமுதாய சமூகப்பணி குழுவானது உருவாக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் குறித்த குழுவானது நிகழ்தகவற்ற நோக்கமாதிரி அடிப்படையில் அரச மற்றும் அரசசாரா உத்தியோகத்தர்கள், சமூகமட்ட பிரதிநிதிகள் 11 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மூலமும் உள்ளூர் சமூகமட்ட அமைப்பு அங்கத்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட 02 மைய குழு கலந்துரையாடல் ஆகியவற்றை பயன்படுத்தி அளவு மற்றும் பண்புசார்பு அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டதுடன் கணிப்பீட்டு கருவிகள் மூலம் முன்பள்ளி கட்டமைப்பு கணிப்பீடு செய்யப்பட்டு கருத்தியல் மற்றும் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு பிரச்சினைகள் இனங்காணப்பட்டு இலக்குகளாக மலசலகூடவசதி அமைத்தல், விளையாட்டு முற்றம் அமைத்தல், முன்பள்ளி கட்டிடத்தை புனரமைத்தல், ஆசிரியர்களின் இயலளவை விருத்தி செய்தல், போன்ற இலக்குகளை அடிப்படையாக கொண்டு சூழலியல் கோட்பாடு, வறுமை கோட்பாடு, கற்றல் கோட்பாடு, ஊக்கப்படுத்தல் கோட்பாடு போன்ற கோட்பாட்டு பார்வைகளை அடிப்படையாகக் கொண்டு தலையீட்டு திட்டம் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டதுடன் மதிப்பீடும் செய்யப்பட்டது. இதன் மூலம் முன்பள்ளி கட்டமைப்மைப்பின் உள்ளக முரண்பாடுகள் முகாமை செய்யப்பட்டு உட்கட்டுமானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஆசிரியர்களுக்கான வலுப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு மகிழ்ச்சிகரமான கற்பித்தல் முன்னெடுப்பதற்கான வசதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் பேண்தகு நிலைக்கான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையும் இடம்பெறுவதற்கான வலுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டது.


**திறவு சொற்கள் : முன்பள்ளி, வலுவூட்டல், சமூகப்பணி இடையீடு**

**அறிமுகம்**

திருநகர் வடக்கு கிராமம் கரைச்சி பிரதேச செயலகத்தின் எல்லைக்குள் காணப்படுவதுடன் நகருக்கு அண்மையில் உள்ள கிராமமாகவும் காணப்படுவதனாலும் பெரும்பான்மையானவர்கள் காணியின் அளவு இரண்டுப்பரப்பிற்குட்பட்டதாகவும் காணப்படுவதனாலும், குறுகிய கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு பொதுசுகாதார பரிசோதகர்களின் அனுமதியை கோருதல் இயலாததாகவும் உள்ளதனால் அதிகமானவர்கள் சேவைத்தொழில்களை நம்பி வாழ்வதனால் எதிர்பார்த்த அளவு பொருளாதார ஈட்டல்களை பெற்றுக்கொள்ள முடியாத கிராமமாக காணப்படுகிறது. அதுமாத்திரமன்றி பௌதிகவியல் ரீதியாக நகருக்கு அண்மையில் அமைந்துள்ளதனால் தன்னார்வ நிறுவனங்கள் குறித்த பிரதேசத்தினை தமது பயனாளிகள் கிராமமாக அடையாளப்படுத்தாதனால் கிராமத்தில் காணியற்றோர் பிரச்சினை, வேலைவாய்ப்பற்றோர் பிரச்சினை, சமூகமட்ட அமைப்புக்களுக்கிடையில் முரண்பாடு, உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை, முன்பள்ளி செயற்பாடுகளில் மந்த நிலை போன்றன காணப்படுகின்றன. முன்பள்ளிகளில் அண்ணளவாக கல்வி பயிலும் 15 ஆண் சிறார்களும் 17 பெண் சிறுமிகளுமாக 32 முன்பள்ளி சிறார்கள் நேரடியாக நன்மையடையக்கூடிய விதத்தில் அவர்களின் பெற்றோர், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி அபிவிருத்தி குழு, சமூக மட்ட அமைப்புக்கள், அரச மற்றும் தன்னார்வ பணியாளர்களுடன் செயற்றிட்டத்தின் மூலம் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் எட்டப்பட்டதுடன் முன்பள்ளி செயற்பாட்டை வினைத்திறனாக்கும் வகையில் சமுதாயப்பணி தலையீடும் மேற்கொள்ளப்பட்டது.

வெவ்வேறு பிரதேசங்களை பிரதிநிதித்துவபடுத்துகின்றவர்கள் திருநகர் வடக்கில் குடியேறி உள்ளதனால் அவர்களுடைய கலாசாரம் பேச்சு வழக்கு மொழிகள், ஆலய வழிபாட்டு முறைகள் வேறுபடுவதுடன் சாதிய ரீதியான பாகுபாடுகளும் காணப்படுகிறது. தொழிலுக்காக பிரதேசத்தை விட்டு வெளியே செல்பவர்களது ஆடை கலாசாரமும் தொழிலின் தன்மைக்கு ஏற்ப வித்தியாசப்படுவதை அவதானிக்க முடிவதுடன் பொருளாதார வகுப்புக்களுக்கு ஏற்ப வீட்டு வடிவமைப்பும் வேறுபட்டு காணப்படுகிறது. அது மாத்திரமன்றி காணியின் விஸ்தீரணம் குறைவாக காணப்படுவதனால் சேவை தொழில்களிலும், வர்த்தகத்திலும் ஈடுபடுகின்ற நிலை காணப்படுகிறது.

திருமண உறவுமுறையின் போது தாய்வழி குடும்பமாக காணப்படுவதுடன் திருமணத்தின் போது தமது காணியில் பெண்பிள்ளைக்கு பிரித்து வழங்குகின்ற நிலை காணப்படுகிறது. இதன் மூலம் வீட்டுத்திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்கின்றனர். பெண்தலைமைத்துவ குடும்பங்கள் காணப்படுவதுடன் கருக்குடும்பங்கள் மற்றும் கூட்டுக்குடும்பங்கள் ஒற்றைவழி பெற்றோர் உடைய குடும்பங்களும் காணப்படுகின்றன. பொதுவாக தந்தை குடும்ப அதிகாரத்தை கொண்டிருந்த போதும் பெ.த.கு ஏற்றுக்கொண்ட குடும்பங்களில் பெண்களே குடும்பத்தை நிர்வகிக்கின்ற நிலை காணப்படுகிறது. அரச சேவை மற்றும் தன்னார்வ நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், வர்த்தகர்கள், சந்தையில் மரக்கறி விற்பனை செய்பவர்கள், மீன் வியாபரிகள், ஆடைத்தொழில்சாலை பணியாளர்கள், சுகாதார கழிவகற்றல் தொழிலாளர்கள் போன்றோர் காணப்படுகின்றனர். இந்து மற்றும் இஸ்லாம், கிறிஸ்த்தவ மதத்தை சார்ந்தவர்கள் காணப்படுவதுடன் அவர்கள் வழிபடுவதற்கான வழிபாட்டிடங்களும் காணப்படுகின்றன.

தன்னார்வ நிறுவனங்கள் திருநகர் வடக்கு கிராமத்தில் தலைமை காரியாலயங்களை அமைத்துள்ள போதும் கிராம வெளித்தோற்றத்தின் காரணமாக நிதி வழங்கும் நிறுவனங்கள் முன்வராததனால் செயற்றிட்டங்கள் எவையும் குறித்த கிராமத்தில் முன் எடுக்கப்படாத சூழல் காணப்படுகிறது. எனினும் அரச திட்டங்கள் உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு சமூகமட்ட அமைப்புக்களிடம் காணப்படும் உள்ளக முரண்பாடுகளும் அரசியல் தலையீடுகளும் அபிவிருத்தி செயன்முறையில் மந்தகதியை உருவாக்கிக் காணப்படுகின்றன. இந்நிலை முன்பள்ளி கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் நெருக்கடிகளை உள்ளாக்குவதுடன் சிறுவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிலும் பாதகமான நிலமைகளை தோற்றுவிக்கின்றன. இந்நிலையிலே குறித்த கிராமமானது சமுதாயப்பணி செயற்பாட்டிற்காக தெரிவு செய்யப்படுகிறது.

**அரச சமூக நலன்புரி சலுகைகளை பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை**

| இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | புனர்வாழ்வு பெற்றோர் | 30 |
| 02 | விசேடதேவைக்குட்பட்டோர் | 22 |
| 03 | பெண்தலைமைத்துவ குடும்பங்கள் | 129 |
| 04 | காணாமல்போனோர் | 09 |
| 05 | அரச உத்தியோகத்தர் | 87 |
| 06 | ஓய்வூதியர் | 21 |
| 07 | சமுர்த்தி பயனாளிகள் | 235 |
| 08 | முதியோர் கொடுப்பனவு | 53 |
| 09 | நோய் கொடுப்பனவு | 07 |
| 10 | புற்றுநோய் | 01 |
| 11 | சிறுநீரக நோய் | 06 |
| 12 | மாதாந்த உதவிதொகை | 92 |

(பிரதேசசெயலக புள்ளிவிபர அறிக்கை,2021)

இவை தவிர பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளாக வீதி விளக்குகள் பொருத்துதல், வீதி புனரமைத்தல், நீர் வழங்கல் அதிகாரசபையினால் குடி நீர் விநியோக திட்டம் மின் மயானத்திட்டம் மற்றும் பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சமூகமட்ட அமைப்புக்களை வலுப்படுத்துதல் திட்டங்கள் இளையோர் விவகார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் வலுவூட்டல் திட்டங்கள் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்கள் போன்றனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அது மாத்திரமன்றி அரசசார்பு கட்சி ஒன்றினால் சமூக அடுக்கமைவில் கீழ் நிலையில் உள்ள மக்கள் வாழும் பகுதிகளில் வீதி அபிவிருத்தியை மேற்கொண்டிருப்பதுடன் முன்பள்ளிக்கான வேலி அமைத்தல் கோவிட் சூழ்நிலையில் நிவாரணப்பொருட்களை வழங்குதல் போன்ற செயற்றிட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.

**சமுதாய மட்ட (SNCO Vs PESTEL) கணிப்பீடு**

| | பலங்கள் **Strength** | விருத்தி செய்யப்பட வேண்டியவை **Need to improve** | சவால்கள் **Challeges** | சந்தர்ப்பங்கள் **Opperunity** |
|---|---|---|---|---|
| **அரசியல் Political** | வெவ்வேறுபட்ட கட்சியினர் கிராமத்தில் இருப்பதுடன் பிரதேசசபை தவிசாளர் கிராமத்தில் வசித்தல் | சமூகமட்ட அமைப்புக்களுக் கிடையில் கட்சி முரண்பாடுகள் காணப்படுதல் | கட்சி தலைவர்கள் வாக்கு அரசியல் அடிப்படையில் செயற்றிட்டங்களை செயற்படுத்தல் | அனைத்து கட்சியினரும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் |
| **பொருளாதாரம் Economical** | சேவைத்தொழிலில் தங்கியிருப்பதுடன் வர்த்தகர்கள் அதிகம் வசித்தல் | வேலைவாய்பற்றோர் காணப்படல். சிறு கைத்தொழில்கள் விருத்தி செய்யப்படல் | காணியின்மை தொழிலில் தாக்கம் செலுத்துதல் தன்னார்வ நிறுவனங்கள் நகர்புற கிராமமதாலால் ஈடுபாடு இன்மை | அரச மட்ட நிதி ஒதுக்கீடு காணப்படல் |
| **சமூக Social** | கிராமமட்ட மக்களின் ஈடுபாடு | சமூக ஒற்றுமை | சமூக அடுக்கமைவுக்குஏற்ப மனப்பாங்கு மாறுபடல் | சமூக மட்ட அமைப்புக்கள் காணப்படல் |
| **தொழில்நுட்பம் Technical** | தொழில்நுட்ப அறிவுடைய வள ஆளணி கிராமத்தில் காணப்படல் | தன்னார்வ ரீதியான மனப்பாங்கை கொண்டிராமையும் ஒருங்கிணைப்பதில் உள்ள இடர்பாடுகள் | புதிய தகவல் பரிமாற்ற எழுச்சி | துறைசார் திணைக்களகங்கள் அருகில் இருத்தல் |
| **சூழலியல் Enviormental** | நகர்சூழல் | சுகாதாரமற்ற எரியூட்டும் சுடலை | சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபடுகின்றவர்கள் | அரச திணைக்களகங்கள் மற்றும் அரசசாரா நிறுவனங்கள் அருகில் அமைந்திருத்தல் |
| **சட்டம் Legal** | கல்வி அறிவுடைய மக்கள் சட்ட விழிப்புணர்வை கொண்ருத்தல் | சட்டத்தை மதிக்காத தன்மையுடையோர் காணப்படல் | சட்டத்தை நிலைநாட்டுவதில் அரசியல் அழுத்தங்கள் | காவல்துறை அலுவலகம் அருகில் அமைந்திருத்தல் |

**முறையியல் (Methodology)**

குறித்த கிராமம் வலயக்கல்வி அலுவலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் முன்னுரிமைப்படுத்தப்பட்டத்தற்கு அமைவாக தெரிவு செய்யப்பட்டதுடன் கிராமத்தின் கலாசார மற்றும் வாழ்க்கைமுறைகளை புரிந்துகொள்ளும் பொருட்டு கிராம மட்டத்தில் செயற்படும் சமூகமட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்தி சங்கம்,


மாதர் சங்கம், அறநெறி அறங்காவலர் சபைகள், சமுர்த்தி குழுக்கள் ஆகியவற்றிடமிருந்து தரவுகள் திரட்டப்பட்டு பகுப்பாய்விற்குட்படுத்தி குறித்த அமைப்புக்கள் முன்வைத்த பிரச்சினைகளினை தரப்படுத்தியதற்கு அமைய சுரபி முன்பள்ளி கட்டமைப்பு எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு முன்பள்ளிக்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான சமுதாயப்பணிக்கான சமூகப்பணிக்குழு உருவாக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு குறித்த குழு அங்கத்தவர்களினால் தரவு திரட்டலானது பண்புசார் மற்றும் அளவுசார் முறையில் முதலாம் நிலைதரவுகளான அவதானம் மற்றும் நேர்காணல், மைய குழு கலந்துரையாடல் ஆகியவற்றை பயன்படுத்தி தரவுகள் திரட்டப்பட்டதுடன் இரண்டாம் நிலை தரவுகள் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் மூலம் பெறப்பட்டது.

முதலாம் நிலை தரவு திரட்டலிற்கு முன்பள்ளி தலைமை ஆசிரியர், முன்பள்ளி ஆசிரியர், கிராமசேவகர், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், மருத்துவ மாது, பொது சுகாதார பரிசோதகர், பிரதேச செயலாளர், முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் இணைப்பாளர், முன்பள்ளி முகாமைத்துவ குழுவின் தலைவர், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஆகிய 11 பேர் நோக்கமாதிரி அடிப்படையில் நேர்காணலுக்காக தெரிவு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டதுடன் முன்பள்ளி முகாமைத்துவ குழு மற்றும் கிராம அபிவிருத்தி சங்கம், சனசமூக அமைப்பு, மாதர் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் பெறும் செயற்பாட்டாளர்களுக்கு ஒரு குழுவில் 8-10 அங்கத்தவர்கள் உள்ளடங்கும் விதமாக 02 குவிமையக்குழு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் பெறப்பட்டதுடன் கணிப்பீட்டு கருவிகள் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டு கருத்தியல் மற்றும் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு முன்பள்ளிக்கட்டமைப்பின் பிரச்சினைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு சமூகப்பணி தலையீடு மேற்கொள்ளப்பட்டது.

**முன்பள்ளி பிரச்சினையை மீன் முள்ளுவரைபடத்தில் பகுப்பாய்வு செய்தல்**



**நோக்கமரத்தில் முன்பள்ளி இலக்குகளை குறித்து திட்டமிடுதல்**



**சமூக கொள்கை பகுப்பாய்வு**

சமுதாயபணி பரீட்சயத்திற்காக முன்பள்ளி கட்டமைப்பினை வலுப்படுத்தல் தெரிவு செய்யப்பட்டதற்கு அமைய தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் வடக்கு மாகாண சபை முன்பள்ளி கொள்கைகளும் சட்டங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

**வடக்கு மாகாணசபையின் முன்பள்ளி கொள்கைகள் மற்றும் சட்டங்களின் நியமங்கள்**

| இல | நியமங்கள் | சுரபி முன்பள்ளி பூர்த்தி செய்துள்ளது | சுரபி முன்பள்ளி பூர்த்தி செய்யவில்லை |
|---|---|---|---|
| 01 | அமைவிடம் | மது விற்பனை நிலையம் பேருந்து நிலையம் கைத்தொழில் சாலைகள் நீர் நிலைகள் ஆபத்து விளைவிக்க கூடிய இடங்கள் அல்லது சூழலை மாசுபடுத்தக்கூடிய இடங்கள் எதுவுமற்ற இடத்தில் அமையப்பெற்றுள்ளது | பிரதான வீதியில் பிரதான பாதை அமையப்பெற்றுள்ளது.<br><br>தாவரங்களை நடுவதற்கு கிராமிய அபிவிருத்தி சங்க அனுமதி கிடைக்கப்பெறவில்லை |
| 02 | கட்டிடம் | நிரந்தரமான கட்டிடம் காணப்படுவதுடன் மாணவர்களின் ண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான இடவசதியை கொண்டு காணப்படுகிறது. | சமையல் வசதிகள் ஓய்வு அறை விளையாட்டு பொருட்களை களஞ்சியப்படுத்துவதறகான அறைகள் காணப்படவில்லை |
| 03 | தளபாடங்களும் ஏனைய பொருட்களும் | சிறுவர்களுக்கான தளபாடங்கள் தரைத்தளம் குப்பைதொட்டி விளையாட்டு உபகரணங்கள் பிள்ளைகள் உணவு உண்பதற்கான தட்டுக்கள் குவளைகள் என்பன காணப்படுகின்றன | இசைகருவிகள் மற்றும் உள்ளக வெளியக விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றதுடன் இறாக்கைகள் போதுமானவகையில் காணப்படவில்லை. |
| 04 | தண்ணீர் மற்றும் சுகாதாரம் | கிணறு மற்றும் குளாய் கிணறு காணப்படுகின்ற போதும் | குடிநீர் வசதி காணப்படவில்லை |


| | | | |
|---|---|---|---|
| | | குடிப்பதற்கு பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளது | |
| **05** | மலசலகூடம் | பத்து தொடக்கம் இருபது சிறார்களுக்கு இரு மலசல கூட வசதிகள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சிறார்கள் கிராம அபிவிருத்தி சங்கத்திற்குரிய மலசல கூட வசதிகளையே பயன்படுத்துகிறார்கள். கை கழுவுவதற்கான குளாய் வசதிகள் காணப்படுகின்றன | முன்பள்ளிக்கு தனியான மலசலகூட வசதிகள் கிடையாது என்பதுடன் போதுமானவகையில் கழிவகற்றல் வசதிகளுக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கைகழுவுவதற்கான ஊக்கப்படுத்தல்கள் மற்றும் சுகாதார பழக்கவழக்கங்களை மேம்படுத்துவதற்கான எதுவும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| **06** | போசாக்கும் ஆரோக்கியமும் | சிறுவர்களின் ஆரோக்கிய தன்மையை பதிவு செய்யும் பதிவேடுகள் முதுலுதவி பெட்டிகள் காணப்படுகின்றன | சிறார்களிடம் போசாக்கு மற்றும் சுகாதார பழக்கவழக்கங்கள் போதுமானதாக காணப்படவில்லை என்பதுடன் பெற்றோர் சிறார்களின் போசாக்கு விடயத்தில் அக்கறை காட்டாத தன்மை காணப்படவில்லை |
| **07** | கற்றலுக்கான ஆரோக்கியமான சூழல் | மாகாண கொள்கைகள் மற்றும் சட்டங்களில் சொல்லப்பட்ட நியமங்களை பூர்த்தி செய்யாத போதும் கிடைக்கின்ற வளங்களையும் வசதிகளையும் அடிப்படையாக கொண்டு முன்பள்ளி கற்றல் செயல்பாடுகளை முன்கொண்டு செல்லுகின்ற நிலை காணப்படுகிறது. | சிறுவர்கள் விளையாடுவதற்குரிய இடவசதி போதாதுள்ளதுடன் விளையாட்டு முற்றம் சிதைவடைந்த நிலையில் உள்ளது. விசேட தேவைக்குட்பட்ட சிறார்களுக்கான வசதிகள் எதுவும் காணப்படவில்லை |
| **08** | உள சமூக சூழல் | சிறார்கள் சுதந்திரமான தெரிவையும் நற்பழக்கவழக்கங்களை கற்பதற்கான வாய்ப்பை முன்பள்ளி சூழல் கொண்டிருக்கிறது | கிராமத்தில் காணப்படும் ஏற்றதாழ்வுகள் மற்றும் வாழ்க்கைமுறை சிறார்களில் வெளிப்படுகின்ற நிலை காணப்படுவதனால் அவற்றை முகாமை செய்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன |
| **09** | முகாமைத்துவ மட்டம் | பதிவேடுகள் உரிய வகையில் பேணப்படுகின்ற நிலை காணப்படுகிறது | மேற்பார்வை சிவில் பாதுகாப்பு திணைக்களம் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு, வலயக்கல்வி திணைக்கள அடிப்படையில் மேற்கொள்ளப்படுவது ஆசிரியர்கள் மத்தியில் சுமையை அதிகரிக்கும் விடயமாக காணப்படுகிறது. |
| **10** | சமய சூழல் | அனைத்து விழாக்களும் கொண்டாடப்படுகின்றன | சமயஅனுஸ்டானங்களை மேற்கொள்ள தனி தனி அறைகள் கிடையாது |
| **11** | ஆசிரியர் உள்ளேற்பு | மாணவர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாகவே ஆசிரியர்கள் காணப்படுகின்றனர் | க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த ஆசிரியர் இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 12 | உதவியாளர் | உதவியாளர்பணிகளான சுத்தப்படுத்தல் உணவு பரிமாறுதல் போன்ற பணிகளை ஆசிரியர் பெற்றோரே கவனிக்கின்றனர் | உதவியாளர்களுக்கு பதிலாக பெற்றோரே உதவி செய்கின்ற நிலை காணப்படுகிறது |
| 13 | முன்பள்ளி அபிவிருத்தி சங்கம் | முன்பள்ளி முகாமைத்துவ சபையே முன்பள்ளியின் அபிவிருத்திக்கான நிதி சார்ந்த விடயங்களை கையாள்கிறது | முன்பள்ளி முகாமைத்துவ சபையின் அனைத்து அங்கத்தவர்களும் தொழில்படு நிலையில் இருப்பதாக இல்லை |
| 14 | நாளாந்த கடமைகள் | ஆசிரியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய செயற்படுத்துகிறார்கள் | கொறோனா அனர்த்தம் காரணமாக இயல்பாக நடைபெறுவதில்லை |

**கோட்பாட்டு ரீதியிலான அணுகுமுறை**

முன்பள்ளியின் அபிவிருத்தி தேவைகள் சூழலியல் கோட்பாடு, முன்பள்ளி கொள்கைகள் ஊடாக கணிப்பீடு செய்யப்பட்டு அபிவிருத்தி தேவைகள் இனம் காணப்பட்டது. சமூகப்பணி அணுகுமுறை இடையீடு செய்யப்பட்டு முன்பள்ளி அபிவிருத்தி தேவைகள் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. குடும்ப மற்றும் சமூ சூழல் மற்றும் பெற்றோரியத்திலிருந்து சிறார்கள் கற்றுக்கொள்ளும் விடயங்கள் முன்பள்ளி சிறார்கள் மூலம் சகபாடிகளுக்கு கடத்தப்படுகிறது. இதனால் சூழலியல் கோட்பாடு, சமூககற்றல் கோட்பாடு, வகிபங்கு கோட்பாடு, சமூக உள்ளேற்பு கோட்பாடு, சமூக நடத்தை கோட்பாடு, ஊக்கப்படுத்தல் கோட்பாடு, வறுமை கோட்பாடு, நிர்வாக கோட்பாடு போன்றவற்றின் மூலம் முன்பள்ளி கட்டமைப்பினை கணிப்பீடு செய்வதன் ஊடாக முன்பள்ளியின் அபிவிருத்திகளின் இடைவெளிகளை இனம்காண கூடியதாக இருக்கும்.

சுரபி முன்பள்ளி அபிவிருத்திக்கான எண்ணக்கரு உருவாக்க சட்டகம்



## நோக்கங்கள் (Objective)

- சுரபி முன்பள்ளி முகாமைத்துவ குழுவின் பங்களிப்பினை மேம்படுத்துதல்
- திருநகர் வடக்கு கிராம மட்ட சமுதாய அமைப்புக்களின் பங்களிப்பை சுரபி முன்பள்ளியின் வளர்ச்சிக்கு பயன்படுத்தல்.
- சுரபி முன்பள்ளியின் அடிப்படைவசதிகளை மேம்படுத்துதல்
- சுரபி முன்பள்ளியின் சிறார்களின் கவின்கற்றல் செயற்பாடுகளுக்கான வசதிகளை மேம்படுத்தல்.

## சமுதாய பணி செயற்றிட்டம் (Social Work Intervention)

| இல | கொள்கை | நோக்கம் | செயற்பாடு | கோட்பாடு | திறன்கள் | பொறுப்பு வாய்ந்த அதிகாரி | குறிகாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | முன்பள்ளி பணியாளர்களின் விருத்தி | ஆசிரியர்களின் இயலளவை விருத்தி செய்தல் | இயலளவு விருத்தி பயிற்சி வழங்குதல் | வலுவூட்டல் அணுகுமுறை | வலுவூட்டல் திறன் அறிவூட்டல் திறன் | வலயக்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் | பயிற்சியில் பங்குபற்றிய ஆசிரியர் ண்ணிக்கை |
| 02 | பெற்றோர் குடும்பம் மற்றும் சமுதாய பங்கேற்றல் | முன்பள்ளி செயற்பாட்டில் பெற்றோரின் பொறுப்புக்களை அதிகரித்தல் | செயலட்டைகளை தயார் செய்து வழங்குதல். விழிப்புணர்வை ஏற்படுத்தல் | சூழலியல் கோட்பாடு | இணைப்பு திறன் வுசதிப்படுத்தல் திறன் | முன்பள்ளி ஆசிரியர் வலயக்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் | பெற்றோரின் பங்களிப்புடன் நிறைவு செய்யப்பட்ட செயலட்டை எண்ணிக்கை விழிப்புணர்வில் கலந்து கொண்ட பெற்றோர் |
| 03 | முன்பள்ளி கல்வியின் தரம் | மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குதல் | விளையாட்டு முற்றம் அமைத்தல் கற்றல் உபகரணங்களை வழங்குதல் | சமூக கற்றல் கோட்பாடு | இணைப்பு திறன் வசதிப்படுத்தல் திறன் | முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் | கற்றல் உபகரணங்கள் கிடைக்கப்பட்ட மாணவர் தொகை விளையாட்டு முற்றம் 04பூர்த்தியடைந்திருத்தல் |
| 04 | முன்பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் | உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான தடங்கலை நீக்குதல் | கட்ட புனரமைப்பினை பூர்த்தி செய்தல் மலசல கூட வசதிகளை பெற்றுக்கொடுத்தல் | | ஒருங்கிணைத்தல் திறன் முகாமைத்துவ திறன் தோடர்பாடல் திறன் | முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் முன்பள்ளி அபிவிருத்தி குழு பிரதிநிதிகள் | கட்டடம் பூர்த்தியடைந்திருத்தல் மலசலகூடம் அமைக்கப்பட்டிருத்தல் |

**சமுதாயபணி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தலும் வெளியீடுகளும்**

**ஆசிரியர்களுக்கான இயலளவு பயிற்சி வழங்குதல்**

கிளிநொச்சி வலயக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.யுவராஜா அவர்களின் வழிகாட்டலில் சமுதாயபணியாளரின் வசதிப்படுத்தலிலும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப்பிரிவினால் மனநலமும் நல்வாழ்வும் தொடர்பான பயிற்சி நெறி கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள 62 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 27.09.2021,25.09.2021,30.09.2021 திகதிகளில் நிகழ்நிலை ஊடாக இடம்பெற்றது வளவாளராக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி வரதகௌரி வாசுதேவன், திரு.நிம்சாத், திரு. தவராசா தர்ஸன், திரு. கருணாகரன், திரு. உபைத்துல்லாஹ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

**சுரபி முன்பள்ளி சிறார்கள் கொறோனா அனர்த்த சூழ்நிலையில் வீட்டில் இருந்து கல்வியை தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.**

சமுதாயபணியாளரின் ஒருங்கிணைப்பிற்கும் வசதிப்படுத்தல்களுக்கு அமைய வலயக்கல்வி முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளரின் வழிகாட்டலில் முன்பள்ளி ஆசிரியர்களினால் தயார் செய்யப்பட்ட 34 செயலட்டையினை உளசமூக முகாமைத்துவ நிறுவனத்தின் நிதியுதவியுடன் அச்சிடப்பட்டு பெற்றார்களுக்கு முன்னறிவித்தலும் அறிவூட்டலும் வழங்கப்பட்டு முன்பள்ளி சிறார்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு மீளவும் சிறார்களின் பெற்றார்களின் பங்களிப்புடன் செயலட்டையை பூர்த்தி செய்வதற்கான ஊக்கம் வழங்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் முன்பள்ளி ஆசிரியர்களினால் திருத்தம் செய்யப்பட்டு பெற்றோர்களிடம் மாணவர்களின் பின்னூட்டல்கள் மற்றும் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கப்பட்டது.

**முன்பள்ளி கட்டிடத்தை புனரமைத்தல்**





கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் முக்கியஸ்த்தர்களுடனும் முன்பள்ளி முகாமைத்துவ குழுவுடனும் கலந்துரையாடி முன்பள்ளி கட்டிட புனரமைப்பிற்கு இடையூறாக காணப்பட்ட விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டு முரண்பாட்டு தரப்புக்களின் மூலங்கள் மற்றும் முரண்பாடுகள் களைவதற்கான நடவடிக்கைகள் முன்கொண்டு செல்லப்பட்டதுடன் பிரதேச செயலகத்தின் திட்ட வரைபிற்கு அமைய

ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஊக்கப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதேச செயலகத்தின் முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையை அதிகப்படுத்துவதற்கான வசதிப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

**சுரபி முன்பள்ளிக்கான விளையாட்டு முற்றம் அமைத்தல்**

சுரபி முன்பள்ளிக்கான விளையாட்டு முற்றம் அமைப்பதற்கான கோரிக்கை மாவட்ட செயலகத்திடம் திட்ட நிறுவனமான உளசமூக முகாமைத்துவ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் மாவட்ட செயலகம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு குறித்த கோரிக்கையை சமர்ப்பித்துள்ளதுடன் 2022ம் ஆண்டு காலப்பகுதிக்குள் குறித்த வேலைத்திட்டம் நிறைவடைவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகிறது.

**சுரபி முன்பள்ளிக்கான மலசலகூட வசதிகளை பெற்றுக்கொள்ளலும் பரிந்துரை மேற்கொள்ளலும்**

சுரபி முன்பள்ளிக்கான மலசலகூடம் அமைப்பதற்கான கோரிக்கை மற்றும் குறித்த சிறார்கள் மாகாணசபை முன்பள்ளி கொள்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மலசலகூடம் உள்ளிட்ட தர நியமனங்களை பூர்த்தி செய்யாமல் இயங்கி வருகிறது என்பது பிரதேச செயலகம் மற்றும் வலயக்கல்வி அலுவலகம், மாவட்ட செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் உளசமூக முகாமைத்துவ நிறுவனத்தினால் மாவட்ட செயலகத்திற்கு எழுத்து மூல கோரிக்கைகடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட செயலக தன்னார்வ நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு குறித்த கோரிக்கையை சமர்ப்பித்துள்ளதுடன் 2022ம் ஆண்டு காலப்பகுதிக்குள் குறித்த வேலைத்திட்டம் நிறைவடைவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகிறது.

**சுரபி முன்பள்ளிக்கான குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல்.**





முன்பள்ளிக்கான குடிநீர் வசதிகளை மாவட்ட செயலகத்திற்கு உளசமூக முகாமைத்துவ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நிறுவனத்தினால் குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டதுடன் குடிநீரின் தொடர்பராமரிப்பை கிராமிய அபிவிருத்தி சங்கமும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையை முன்பள்ளி ஆசிரியர்கள் மேற்கொள்ள வசதிப்படுத்தப்பட்டது.

**சுரபி முன்பள்ளிக்கான கவின் கற்றலுக்கான உபகரணங்களை பெற்றுக்கொள்ள வசதிப்படுத்தல்**

மாவட்ட செயலக முன்பிள்ளைபருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட தன்னார்வ நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் 2022 ம் ஆண்டு ஆரம்பத்தில் தன்னார்வ நிறுவனம் மற்றும் அமைச்சின் உதவியுடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர்

**சுரபி முன் பள்ளி முகாமைத்துவ குழுவிற்கான பயிற்சிகளை வழங்குதல்.**

சுரபி முன்பள்ளி முகாமைத்துவ உறுப்பினர்களுக்கான மூன்று மணித்தியால பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் முன்பள்ளியின் எதிர்கால செயற்பாடுகள் , கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை உட்படுவதற்கான வழிகாட்டல்கள் மற்றும் அறிவூட்டல்கள் வழங்கப்பட்டது.

**சமுதாய பங்களிப்பினை பெற்றுக்கொள்ள உபயோகித்த உத்திகளும்**

சமுதாய மட்ட அமைப்புகளை சந்தித்து சமூகமட்ட அமைப்புக்களில் துடிப்புடன் பணியாற்றும் மக்கள் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று மக்களோடு இணைந்து பணியாற்றக்கூடிய எட்டுப்பேர் தெரிவு செய்யப்பட்டு சமுதாய செயலணி உருவாக்கப்பட்டதுடன் சமுதாய பணியின் இலக்கினை எட்டும் பொருட்டு சமுதாய செயலணிக்கான அணி உருவாக்கல் மற்றும் இயலளவு விருத்தி பயிற்சிகள் மூலம் வசதிப்படுத்தப்பட்டது. அது மாத்திரமன்றி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளான பிரதேச செயலக முன்பள்ளி பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர், மாவட்ட பிரதேச செயலக முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர, கள நிறுவன உத்தியோகத்தர் ஆகியோருடைய ஒத்துழைப்பு பெறப்பட்டதுடன் அவர்களின் பங்குபற்றலும் ஈடுபாடும் அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முன்பள்ளி கட்டிடம் புனர் நிர்மாணம் மேற்கொள்ளும் போது கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் முன்பள்ளி முகாமைத்துவ குழுவிற்கு இடையிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கு சமூகத்தில் அந்தஸ்த்து பெற்றவரும் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினருமான ஆசிரியர் ஈடுபடுத்தப்பட்டதுடன் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரியரும் மத்தியஸ்த்தம் மேற்கொள்வதற்கு ஈடுபடுத்தப்பட்டனர்.

**செயற்றிட்டத்தை முடிவுறுத்தும் போது எவ்வளவு தூரம் இலக்குகள் அடையப்பெற்றிருந்த விதம்**

| இல | விடயம் | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு |
|---|---|---|---|
| 01 | ஆசிரியர்களின் இயலளவை விருத்தி செய்தல் | 2019 இற்கு பின்னர் எவ்வித பயிற்சிகளும் இடம்பெற்றிருக்கவில்லை | சுரபி முன்பள்ளி ஆசிரியர்கள் உளநலமும் நல்வாழ்வும் தொடர்பான ஆற்றலை பெற்றிருந்தனர் |
| 02 | முன்பள்ளி செயற்பாட்டில் பெற்றோரின் பொறுப்புக்களை அதிகரிக்க செய்தல் | செயலட்டைகளோ அல்லது கற்றல் செயற்பாடுகள் எதுவும் 2020 இற்கு பின்னர் இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன் முன்பள்ளி சிறார்களின் கல்வி செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு குறைவாக காணப்பட்டது. | செயலட்டைகள் முன்பள்ளி சிறார்களுக்கு வழங்கப்பட்டு பெற்றோரின் வகிபங்குகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் முன்பள்ளி சிரமதான பணியில் பெற்றோர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர் |

| | | | |
|---|---|---|---|
| 03 | முன்பள்ளியின் உட்கட்டமைப்பினை விருத்தி செய்தல் முன்பள்ளி கட்டிடத்தை புனரமைப்பு செய்தல் | முன்பள்ளி கட்டிடம் சமூகமட்ட அமைப்புக்களின் முரண்பாடுகள் காரணமாக புனரமைப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தது | முன்பள்ளி கட்டிடம் புனரமைப்பு செய்யப்பட்டு முன்பள்ளி சிறார்கள் போதுமான இடவசதியை பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது |
| 04 | முன்பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் குடிநீர் வசதியை ஏற்படுத்தல்.<br>மலசல கூடம் அமைத்தல் | நீர் நிலைகள் காணப்பட்ட போதும் முன்பள்ளி சிறார்கள் குடிநீர் வசதியை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டனர்.<br>மலசல கூடம் காணப்படவில்லை | குடிநீர் தாங்கி அமைக்கப்பட்டு குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டதுடன் கைகழுவுவதற்குமான வசதி ஏற்படுத்தப்பட்டது<br>மலசலகூடம் அமைப்பதற்கான கோரிக்கை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |
| 05 | மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குதல். முன்பள்ளி விளையாட்டு முற்றம் அமைத்தல் | முன்பள்ளி விளையாட்டு முற்றம் சிறுவர்கள் பயன்படுத்த முடியாத நிலையில் விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்து காணப்பட்டது | முன்பள்ளி விளையாட்டு முற்றம் அமைப்பதற்கான கோரிக்கை மாவட்ட செயலகம் ஊடாக சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள்**

| இல | இலக்கு | செயற்பாடு | குறிகாட்டிகள் |
|---|---|---|---|
| 01 | ஆசிரியர்களின் இயலளவை விருத்தி செய்தல் | ஆற்றல் விருத்தி பயிற்சி | பயிற்சியில் பங்கு கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| 02 | முன்பள்ளி செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பை அதிகரித்தல் | செயலட்டைகள் மூலமான கற்றல் செயற்பாட்டை முன்னெடுத்தல் | செயலட்டைகளை பெற்றோர் பங்களிப்புடன் பூர்த்தி செய்து சமர்ப்பித்த சிறார்களின் எண்ணிக்கை |
| 03 | முன்பள்ளி உட்கட்டமைப்பு வசதி | முன்பள்ளி கட்டிடத்தை புனரமைத்தல் | முன்பள்ளி கட்டிடம் புனரமைக்கப்பட்டிருத்தல் முன்பள்ளி கட்டிட இடவசதியை முன்பள்ளி சிறார்கள் பயன்படுத்துதல் |
| 04.1 | முன்பள்ளியின் அடிப்படை வசதிகளை உருவாக்குதல் | குடிநீர் வசதியை ஏற்படுத்தல் | குடிநீர் தாங்கிகளின் எண்ணிக்கை குடிநீர் வசதியை பயன்படுத்தும் சிறார்களின் எண்ணிக்கை |
| 04.2 | முன்பள்ளியின் அடிப்படை வசதிகளை உருவாக்குதல் | மலசல கூடம் அமைத்தல் | புதிதாக அமைக்கப்பட்ட மலசலகூடங்களின் எண்ணிக்கை மலசலகூடங்களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை |
| 05 | மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாட்டை உருவாக்குதல் | விளையாட்டு முற்றம் அமைத்தல் | முன்பள்ளி சிறார்கள் மகிழ்ச்சிகரமான கற்றல் நடவடிக்கைக்கு விளையாட்டு முற்றத்தை பயன்படுத்துதல் |

**சிபார்சு**

- ✓ சுரபி முன்பள்ளி மாகாண கொள்கை மற்றும் வலயக்கல்வி அலுவலகத்தின் செயற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் முன்பள்ளி செயற்பாட்டு நேரத்தில் இடையூறு இன்றி செயலாற்றுவதற்கும் ஏற்ற வகையில் தனியான காணியை பெற்று அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது சிறப்பானது
- ✓ பிரதேச செயலக முன்பள்ளி பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்பள்ளி கொள்கைகள் தொடர்பான அறிவை பெற்றிருக்க வேண்டியதுடன் வடமாகாணத்தில் போதுமான வசதியின்மையை கொண்டிருக்கும் முன்பள்ளிகளை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளில் மாகாணசபை கவனம் செலுத்த வேண்டும்.
- ✓ முன்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளி செயற்பாட்டுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் அடிப்படை சமுதாய பணி அறிவை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.
- ✓ முன்பள்ளி ஆசிரியர் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து மாகாணசபைகளுக்கு இணைக்கப்படுவதன் மூலம் சுதந்திரமாக பயிற்சிகள் மற்றும் ஆற்றல் விருத்தி செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.
- ✓ முன்பள்ளி அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது சமுதாய பங்குபற்றலுடன் முன்பள்ளி தேவைப்பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் வலியுறுத்தப்பட வேண்டும்.

**நிறைவு**

சமுதாயப்பணி களப்பரீட்சயத்தின் பொருட்டு சமுதாயப்பணி மாணவனினால் திருநகர் வடக்கு கிராமத்தில் சமுதாய செயலணி உருவாக்கப்பட்டு குழுப்பணியின் ஊடாக குறித்த அணியானது வலுவடைய செய்யப்பட்டு சமுதாயத்தின் தேவைகள் மற்றும் சுரபி முன்பள்ளியின் வளங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் கணிப்பீட்டு கருவிகள், கொள்கைகள், கோட்பாடுகளை பயன்படுத்தி முன்பள்ளி தேவைகள் அடையாளம் காணப்பட்டு சமூகப்பணி இடையீடு மேற்கொள்வதன் ஊடாக முன்பள்ளியின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டதுடன் பூர்த்தியாகாத தேவைகள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் Referal செய்யப்பட்டு திட்டத்தின் நீடித்த நிலையான தன்மை உறுதிசெய்யப்பட்டது.

**உசாத்துணை நூல் பட்டியல்**

Garvin, C,D et al (2004) Handbook of Social Work with Groups, Rawat Publications, New Delhi ( Reprinted in 2007)

Johnson, D, W & Johnson, F, P (1997), joining; Group Theory and Group Skills, Allyn & Bacon, U.S.A.

Konopka, Gisela (1963) Social Group work: A Helping process, Prentice- Hali Inc, USA. Preston- Shoot,

Michael,S, (2007) Effective Group Work Practice, Second Edition, Palgrave, Macmillan, New York.

அஸ்மியாஸ் (2018), மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்வு ஒரு உளவியல் கண்ணோட்டம், ரேடியன்ஸ் பதிப்பகம், கொழும்பு.

இராசேந்திரம் ஸ்ராலின்,(2015),ஆளுமை கொள்கைகள், ஜீவநதி வெளியீடு, அல்வாய்.

வேலுப்பிள்ளை சிவயோகலிங்கம் (2014) இலங்கையில் சிறுவர் பராமரிப்பும் அபிவிருத்தியும் இஸ்லாமிக் புக் கவுஸ் கொழும்பு.